

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (21.05.2023) வடபழனி ஆண்டவர் திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் சக்தி நிலையத்தை ( Solar Power Piant) தொடங்கி வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ. கருணாநிதி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் கவிமுரளீதரன், திருக்கோயில் தக்கார் எல் ஆதிமூலம், சிட்டி யூனியன் வங்கியின் மேலாண்மை இயக்குனர் காமகோடி, மாநகராட்சி மண்டலக்குழு தலைவர் எம் கிருஷ்ணமூர்த்தி, இணை ஆணையர் அர.சுதர்சன். திருக்கோயில் துணை ஆணையர் செயல் அலுவலர் திருமதி ஐ.முல்லை மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

வீட்டு வசதி வாரியத்தில்

# நில எடுப்பு தொடர்பாக சிறப்புக்குழு அமைக்க நடவடிக்கை!

## அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் ஆய்வுக்கூட்டம்!

சென்னை, மே.22-

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால், நில எடுப்பு தொடர்பாக நடைமுறையில் உள்ள சிக்கல்களால், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும், நில உரிமையாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்ட விதிமுறைகள் உட்பட அனைத்து வகையிலும் ஆய்வு செய்ய தகுதியான ஒரு சிறப்பு குழுவை அமைத்து, அதன் மூலம் பொது மக்களின் கோரிக்கைகளுக்கு விரைவான தீர்வு காண வேண்டுமென்று தெரிவித்துள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, நேற்று முன் தினம் (20.05.2023), தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய தலைமை அலுவலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில், அதிகாரிகள் மற்றும் சட்ட அறிஞர்களை உள்ளடக்கிய சிறப்பு குழு அமைப்பது தொடர்பாகவும், வாரிய அலுவலகங்களில் கோரிக்கை மனு பெட்டிகள் ஜூன் 3ஆம் தேதி முதல் ஜூன் 30ஆம் தேதி வரை மனுக்கள் அளிக்க தயார் நிலையில் வைப்பது தொடர்பாகவும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வாரிய மேலாண்மை இயக்குநர் எ.சரவணவேல்ராஜ் மற்றும் வாரிய அலுவலர்கள் உடனிருந்தனர்.

முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமை!

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் - கலைஞர் நூற்றாண்டு விழா!

## இலங்கை முஸ்லிம் காங்.தலைவர் ரவூப் ஹக்கீம் சிறப்புரை!

சென்னை, மே.22-

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நடைபெறுகிறது.

கொழும்பு தமிழ்ச்சங்கம் - உருத்திரா மாவத்தை வெள்ளவத்தையில் 3.6.2023 - சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமை வகிக்கிறார்.

'தினகரன்' பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் முன்னிலை வகிக்கிறார்.

நிகழ்ச்சியில் - கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

வழக்கறிஞர் எம்.ஸ்ரீதர், இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி நிர்வாகி எம்.நாகரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் - இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சிறப்புரையாற்றுகிறார்.

மனோ கணேசன், வே. இராதாகிருஷ்ணன், செல்வம் அடைக்கலநாதன், செந்தில் தொண்டைமான், பி.பி.தேவராஜ், ஆர்.யோகராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மணவை அசோகன் நன்றி கூறுகிறார்.




